சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்)
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590

**ஆணை நாள் 06.07.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இ.கா.ப. (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

•••••

**வழக்கு எண். SA 10434/E/2024**

திரு.A.சுரேஷ் -- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம், பொது அதிகார அமைப்பு
தண்டையார்பேட்டை வட்டம்,
சென்னை மாவட்டம்.

******

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (06.07.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மேல்முறையீட்டாளர் | திரு.A.சுரேஷ் அவர்கள் இன்றைய விசாரணையில் ஆஜரானார். |
| பொது அதிகார அமைப்பின் சார்பாக | திரு.அ.அங்கையா, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், தண்டையார்பேட்டை வட்டம், சென்னை அவர்கள் ஆஜரானார். |
| சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் மனு நாள் | 13.06.2024 |
| **கோரிய தகவல்**, கே.சி.எஸ்.காலேஜ் கட்டிடம் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-4, பகுதி-10, வார்டு-42 கட்டிட எண்.178 AV, 179 AV, 180 AV, 181 AV, 187 AV, 188 AV எல்லையா முதலி தெரு, கொருக்குப்பேட்டை, சென்னை , என்ற காலேஜ் நிலம் பற்றிய தகவலையும் அதற்குண்டான பட்டா உள்ளதா? இல்லையா? உள்ளிட்ட 6 இனங்களில் தகவல்களை வழங்கக் கோரி, பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சென்னை அவர்களுக்கு மனு செய்துள்ளார். மனுவானது சட்டப் பிரிவு 6(3)-ன்கீழ் பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்ட ஆட்சியரின் நேர்முக | |

| | |
|---|---|
| உதவியாளர் (நிலம்)(பொ), சென்னை அவர்களின் 18.07.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக பொதுத் தகவல் அலுவலர்/ தலைமையிடத்து துணை வட்டாட்சியர், தண்டையார்பேட்டை, சென்னை அவர்களுக்கு மாற்றப்பட்டுள்ளது. | |
| பொதுத் தகவல் அலுவலர் பதில் கடிதம் | ந.க.எண்.45144/2025, நாள் 05.11.2025 |
| சட்டப் பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனு நாள் | 12.07.2024 |
| மேல்முறையீட்டு அலுவலர் பதில் கடிதம் | ---- |
| சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் | 11.08.2024 |

•••••

- பொதுத் தகவல் அலுவலர், இவ்வழக்கில் மனுதாரர் கோரிய தகவல் தங்கள் அலுவலக கடித ந.க.எண்.45144/2025, நாள் 05.11.2025 தேதியிட்ட கடிதம் வாயிலாக பொது அதிகார அமைப்பின் பராமரிப்பில் உள்ளவாறு மனுதாரருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளதாக எடுத்துரைக்கிறார்.
- மனுதாரர், வழங்கப்பட்ட தகவல் உரிய தகவல் அல்ல எனவும், தகவல் வழங்க மறுக்கப்பட்டுள்ளதாகவும், பழைய வரைபடம் வழங்கப்பட்டுள்ளதாகவும், புதிய வரைபடம் தனக்கு தகவலாக வழங்கப்படவில்லை எனவும் எடுத்துரைக்கிறார்.

2. மனுதாரர் மற்றும் பொதுத் தகவல் அலுவலரின் வாதம் மற்றும் ஆவணங்களை ஆணையம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு கீழ்கண்டவாறு உத்தரவிடப்படுகிறது:-

a) இவ்வழக்கில் மனுதாரர் 13.06.2024 தேதியிட்டு சட்டப் பிரிவு 6(1)-ன்கீழ் கோரிய தகவல்களுக்கு, மேல்முறையீட்டு அலுவலர்/ வட்டத் துணை ஆய்வாளர், தண்டையார்பேட்டை அவர்களின் 05.11.2025 தேதியிட்ட கடிதம் வாயிலாக முதன் முதலாக மனுதாரருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளதை இன்றைய ஆவண பரிசீலனையில் தெரியவருகிறது.

b) மேலும், மனுதாரர் இனம் 1-ல் கட்டிட எண். எண்.178 AV, 179 AV, 180 AV, 181 AV, 187 AV, 188 AV எல்லையா முதலி தெரு, கொருக்குப்பேட்டை, சென்னை-600021 என குறிப்பிட்டுள்ளார். இதனை தகவலாக கருத வழிவகை இல்லை என ஆணையத்தால் கருதப்படுகிறது.

c) ஏனைய இனம் 2, 3, 4, 5 மற்றும் 6-க்கு வழங்கப்பட்ட தகவல் போதிய தகவல் என ஆணையத்தால் கருதப்படுகிறது.

d) மனுதாரர் குறிப்பிட்டுக் கோரியுள்ள சென்னை பெருநகர மாநகராட்சி, மண்டலம்-4, பகுதி-10, வார்டு-42 கே.சி.எஸ்.காலேஜ்-ஆனது, 3810/3, 3810/4, 3810/5 என்ற மூன்று சர்வே எண்களில் அமைந்துள்ளதாகவும், அதற்கான

வரைபடத்தினையும் மனுதாரருக்கு 05.11.2025 தேதியிட்ட பொதுத் தகவல் அலுவலரின் கடிதத்தின் வாயிலாக வழங்கப்பட்டுள்ளது. வழங்கப்பட்டுள்ள வரைபடமானது பழைய வரைபடம் எனவும், புதிய வரைபடம் தனக்கு தகவலாக வழங்கப்படவில்லை எனவும் இன்று ஆஜரான மனுதாரர் ஆணையத்தில் எடுத்துரைத்தார்.

e) பொதுத் தகவல் அலுவலர், பொது அதிகார அமைப்பின் பராமரிப்பில் உள்ளவாறு மனுதாரருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளதாக எடுத்துரைக்கிறார்.

f) எனவே, மேற்படி கல்லூரிக்கான சர்வே எண் தொடர்பாக பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட வரைபடமான, எந்த வருடத்திற்கான வரைபடம் என்பதை குறிப்பிட்டு சட்டப் பிதிவு 7(6)-ன்படி கட்டணம் ஏதுமின்றி, அலுவலக முத்திரையுடன் கூடிய சான்றொப்பத்துடன், ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் மனுதாரருக்கு வழங்கி, மனுதாரர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்ததற்கான ஒப்புகை அட்டையின் நகல் அல்லது அஞ்சல் துறையின் இணையதள அறிக்கையின் நகல் (Online Tracking Consignment) மற்றும் வழங்கப்பட்ட தகவல் குறித்த அறிக்கையின் நகலினை **இவ்வாணையத்தில் 04.08.2026 அன்று நேரில் சமர்ப்பிக்க இன்று ஆஜரான பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.**

g) மேலுமம, இவ்வழக்கில் மனுதாரரின் 13.06.2024 தேதியிட்ட சட்டப் பிரிவு 6(1) மனுவினை பெற்றுக்கொண்டு, வரையறுக்கப்பட்ட 5 தினங்களுக்குள் சட்டப் பிரிவு 6(3)-ன்கீழ் மனுவினை தொடர்புடைய பொதுத் தகவல் அலுவலர்/ பொது அதிகார அமைப்பிற்கு மாற்றத் தவறிய அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் யார் என கண்டறிந்து, அவர் மீது சட்டப் பிரிவு 20(1)-ன்கீழ் பணத்தண்டமும், 20(2)-ன்கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள ஏன் பரிந்துரைக்கக் கூடாது என்பதற்கான எழுத்துப்பூர்வமான விளக்கத்தினையும், மனுதாரரின் 12.07.2024 தேதியிட்ட சட்டப் பிரிவு 19(1)-ன்கீழான முதல் மேல்முறையீட்டு மனுவினை பெற்றுக்கொண்டு, மனுதாரருக்கு தகவல் வழங்கத் தவறிய அப்போதைய முதல் மேல்முறையீட்டு அலுவலர் அலுவலர் யார் என கண்டறிந்து, மேற்படி முதல் மேல்முறையீட்டு மனுவிற்கு தகவல் வழங்கத் தவறிய வகைக்கு அவரிடமிருந்து எழுத்துப் பூர்வமான விளக்கத்தினையும் பெற்று, அதனை ஓர் அறிக்கையாக தயார் செய்து **அவ்வறிக்கையினை 04.08.2026 அன்று இவ்வாணையத்தில் நேரில் சமர்ப்பிக்க பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது/ நிலம்), சென்னை அவர்களுக்கு உத்தரவிடப்படுகிறது**.

h) மேலும், மனுதாரரின் 13.06.2024 தேதியிட்ட சட்டப் பிரிவு 6(1) மனுவினை சட்டப் பிரிவு 6(3)-ன்கீழ் பெற்றுக்கொண்டு, மனு பெறப்பட்ட 30 தினங்களுக்குள் தகவல் வழங்கத் தவறிய அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் யார் என கண்டறிந்து அவர் மீதும் சட்டப் பிரிவு 20(1)-ன்கீழ் பணத்தண்டமும், 20(2)-ன்கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் ஏன் பரிந்துரைக்கக் கூடாது என்பதற்கான எழுத்துப்பூர்வமான விளக்கத்தினை

பெற்று, அதனை ஓர் அறிக்கையாக தயார் செய்து அவ்வறிக்கையினை இன்று ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக இவ்வாணையத்தில் **04.08.2026 அன்று நேரில் சமர்ப்பிக்க முதல் மேல்முறையீட்டு அலுவலர்/ வட்டாட்சியர், தண்டையார்பேட்டை வட்டம் அவர்களுக்கு உத்தரவிடப்படுகிறது**.

i) மேற்படி உத்தரவினை முழுமையான நிறைவேற்றி அதுகுறித்த அறிக்கையினை மேற்சொன்ன தேதியில் இவ்வாணையத்தில் சமர்ப்பிக்க தவறும் பட்சத்தில், விளக்கம் அளிக்க ஏதும் இல்லை என ஆணையத்தால் கருதப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என எச்சரிக்கப்படுகிறது.

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 10434/E/2024**
**பெறுநர்**

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது/ நிலம்),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சென்னை-01.

முதல் மேல்முறையீட்டு அலுவலர்/
வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம், தண்டையார்பேட்டை வட்டம்,
சென்னை மாவட்டம்.

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம், தண்டையார்பேட்டை வட்டம்,
சென்னை மாவட்டம்.

**மேல்முறையீட்டாளர்**
திரு.A.சுரேஷ், த/பெ.L.ஆனந்தன் (லேட்),
ப.எண்.36, பு.எண்.27, திருநாவுக்கரசு தோட்டம்,
1-வது முட்டு சந்து, கொருக்குப்பேட்டை, சென்னை-21.

Copy to: File MP/PA-